Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 2௨ உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு மார்கழிமீ ௨௬ உ வெள்ளிக்கிழமை (10 January. 1964 [இல-சுக]

## சைவப்பணியில் தமிழ்ப் பெண்கள்

சென்ற 23, 24, 25 ஆம் திகதிகளில் சைவபரிபாலன சபையாரால் சபை நாவலர்மண்டபத்தில் நடத்தப்பெற்ற அகில இலங்கைச் சைவமகாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திருவெண்காடு சிவராஜயோகமடத் தலைவர் **ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக ஞானதேசிகசுவாமிகள்** ஆற்றிய தலைமைச் சொற்பொழிவின் சாரம்.]

[தொகுத்தவர்: திரு. வை. இரகுநாதமுதலியார் M. Sc. நீராவியடி.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகஞானதேசிக சுவாமிகள் தலைமையில் ஆரம்பமாகியது. "சைவமும் மகளிரும்" என்ற பொருளில் பேசும்போது அவர் கூறியதாவது: அடியார்களின் வாழ்க்கையை முழுமையாக்கிய பெரும் பங்கு பெண்களிடமே இருந்தது. திலகவதியார், மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் போன்றவர்களின் அடிச்சுவட்டை, இக்கால மகளிரும் பின்பற்ற வேண்டும். பெற்றோர்களையும், கணவனுக வரிக்கப்பட்டவரையும் பிரிந்த பின்னர் உயிர்வாழ விரும்பாது இறக்கப்புகுந்த தம்பியாருடைய வேண்டுதலுக்குச் செவிசாய்த்து "தம்பியார் உளராகவேண்டும்" என்று விரும்பித் தம் உயிர்தாங்கி, பின் அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி, வாழ்ந்தாராம். பின்னரும் தன் தம்பியார் வேறுசமயம் புகுந்து சற்சமயம் எது என்று அறியாது மயங்கும்பொழுது, அவரை இறைவன்மூலமாக ஆட்கொண்டு சற்சமயம் எது என்பதை உணரப் பண்ணினர். இதுவே நாவுக்கரசரின் பிற்கால வாழ்க்கைக்கு அத்திவாரமாக அமைந்தது.

மங்கையற்கரசியார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் "மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை......" என்ற பாடலில் சிறப்பிக்கப்பட்டுள்ளார். மங்கையர்க்கரசியாரின் தவம் சைவ சமயத்தைத் வளர்க்கவும், கணவனைத் திருத்தவும், என்ற பரந்தநோக்குடனே அமைந்தது. பாண்டிமாதேவி பாலறுவாயனைக் கண்ட காட்சியைச் சேக்கிழார் "ஞானத் திருவுருவை......" என்று தொடங்கும் பாடலில் முழுமையாகக் காட்டியுள்ளார் பாண்டிமாதேவி சைவநெறியைக் கைவிடாது இருந்தமையைக் கண்ட சம்பந்த சுவாமிகள், "சூழுமாகிய பரசமயத்திடைத்தொண்டு வாழும் நீர்மையீர்! உமைக் காணவந்தனம் என்றார்".

சைவர்கள், பௌத்த ஜைன மத மக்களுக்குப் பெரும் துன்பம் கொடுத்துள்ளனர் என்ற தவறான கருத்து எவ்வாறோ சம் சைவமக்களிடையே நிலவி வருகின்றது. உதாரணத்திற்குச் சமணர்கள் கழுவேறிய செயலைக்காட்டுகின்றனர். ஆனல் உண்மையோ வேறு. சமணர்கள் மந்திரியாகிய குலச்சிறையார் சைவராகையால் அவர்தம் கடமையை நிறைவேற்றும்பொழுது கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் "பொங்கிய வெகுளி கூரப் பொருமை காரணமேயாகத் தங்கள் வாய் சோர்ந்து தாமே 'தனி வாதில் அழிந்தோமாகில வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே' என்று கூறியதாகத் சேக்கிழார் கூறுகின்றார். வாதில் தோற்றபின், மாறன் மந்திரியாரை நோக்கி "கொல்லனைக் கழுவில் ஏற முறை செய்க", என்றலும், மந்திரியார் கழுமரங்களை நாட்டலும் அச்சமணர்கள், எண் பெருங் குன்றத் தெண்ணாயிரவரும் ஏறினர்கள, இதை எல்லாம் பார்த்துக் கேட்டும் இருந்த சம்பந்த சுவாமிகள் அதைத் தடுக்காத காரணம், இவர்கள் மடத்திற்குத் தீங்கு விளைவித்தமையால், குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப் படவேண்டும் என்ற பொது நோக்கும்தான். ஆனல் சமணர்களும் பௌத்தர்களும் சைவர்களுக்கு விளைத்த இன்னலோ கணக்கற்றவை உதாரணத்திற்குத் திருநாவுக்கரசு நாயனருக்குச் சமணர்கள் விளைத்த இன்னலைக் காட்டலாம.

இவ்வாறு பாண்டிமாதேவி கல்லானுலும் கணவன் புல்லானுலும் புருஷன் என்றிர்மல திருவருள் துணைகூட்ட கணவனை நல்வழிப்படுத்தி சைவத்தையும் மீண்டும் வளரும்படி செய்தார்.

காரைக்கால்அம்மையார் புனிதவதியார் என்னும் நாமத்தைப் பெற்றிருந்தாலும், அம்மையார் என்றே அழைக்கப்படுகின்றார். இறைவனுல் "அம்மையே" என்று அழைக்கப்பட்டவர். இறைவனை "அப்பா" என்று அழைத்தவா. இவர் இலட்சியத்தை மனத்தில் கொண்டு கற்புநெறியும் அறநெறியும் பிறழாது வாழ்ந்தார். மாம்பழம் இவர் வாழ்வில் சிக்கலை உண்டுபண்ணி, இவரின் தன்மையைக் கணவனுக்குப் புலப்படுத்தியது இவர் தன்னுடைய கணவராலும் வணங்குதற்குரிய தெய்வமானுர். இறைவனை வணங்கிப் பேய்வடிவம் பெற்று, பதிகப்பாடல்கள் பாடி, ஈற்றில் கைலையங்கிரிக்குத் தலையாலே நடந்து சென்றார். இறைவன் [illegible] வேண்டுவதென்?" என்று வினவ, பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமைவேண்டும்..." என்று இரந்து பெற்றார்.

செயற்கரியசெயல் செய்த பெருமை, சிறுத்தொண்ட நாயனருக்கும் அவரது மனைவியாருக்குமே சாரும. பத்துமாதம் சுமந்து, தவம் செய்து, கண்ணென வளர்த்த தம ஒரேஒரு மகனை அரிந்து கறி சமைத்தல் என்பது எல்லோராலும் முடியாது. திருவருள்பெற்ற இவர்கள், இச் செயலைத் துணிவுடன் செய்து வந்த சிவனடியார் விரும்பத்தை

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

### நற் சிந்தனை

தண்ணீர் குளிருமோ
தழலுஞ் சுடுமோதான்
மண்ணிற் றுறந்தோர்க்கு
மற்று

### மாகோவில் சைவக் கோவில்

மாகோ சைவ சேவாசங்கம்

—0—

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. கா. த. முத்தையா அவர்கள் தலைமையில் மாகோ ஸ்ரீ. சுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. காரியதரிசியால் சென்ற கூட்ட வரலாறும், தனாதிகாரியால் வரவு செலவுக் கணக்கும் வாசித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் கௌரவ போஷகர்கள் சேர். அருணசலம் மகாதேவா, சேர். கந்தையா வைத்தியநாதன், திரு. சி தியாகலிங்கம் அவர்கள். தலைவர் திரு. சி. குமாரசாமி. உபதலைவர்கள் திரு. கா. குகமூர்த்தி, திரு. வி. வையிரமுத்து அவர்கள். கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு அவர்கள், கௌரவ உபகாரியதரிசி திரு த. மகேந்திரன் அவர்கள், சௌரவ தனாதிகாரி திரு. ச. இ மகாதேவா அவர்கள். இன்னும் 9பேர்கொண்ட நிருவாகசபை தெரியப்பட்டது மேற்படி சங்கம் மாகோவில் ஓர் ஸ்ரீ. சுப்பிரமணியசுவாமி கோவில் உண்டாக்கிப் பிரதிஷ்டை செய்து அதன் பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்தி வருகின்றது.

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்ருய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதி

——

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

### ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் ஞாபகார்த்தச்சிலை

தமிழ்ப்பெரும் மக்களுக்கு
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் வேண்டுகோள்

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் புரிந்த தொண்டுகள் யாவருமறிந்தவையே அப்பெரியாரின் ஞாபகார்த்தமாக, யாழ்ப்பாணம் முற்றவெளியில் யாழ்மக்கள் நால் நிலைய முன்றிலில் அன்னாரின் வெண்கல உருவச்சிலை நாட்ட யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை தீர்மானித்துள்ளது. இப்பணிக்கு 25,000 ரூபாவரை தேவைப்படுமாகையால், இப்போதைய மாணவர்களையும இக்கைங்கரியத்தில் ஈடுபடுத்தும் முகமாக நாவலர் கொடித்தினம ஒன்று கொண்டாடுவதற்குச் சபை தீர்மானித்திருக்கிறது. கொடித்தினம் பின் அறிவிக்கப்படும். கல்லூரி அதிபர்களையும், தலைமையாசிரியர்களையும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்குமாறு சபை கேட்டுக்கொள்ளுகின்றது,

மு. வைத்திலிங்கம்,
வ. கார்த்திகேசு
(கொடித்தின இணைச் செயலாளர்கள்)

ஆ. தனபாலசிங்கம்,
கௌரவ காரியதரிசி,
சைவபரிபாலன சபை.

### சென்நெலும் கன்னலும் செழிக்க!

★

[பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர்]

பூமகள் கருணைப் பொற்பால் தமிழர்
சென்நெலும் கன்னலும் மன்னிச் செழிக்க
தையெனுந் திங்கள் சைவத் திருவுடன்
இந்திரன் கணேசன் சுந்தர முருகன்
சீரிய பகலில் சூரியன் சார
முந்தை முறையின் வந்த பொங்கலைப்
பால்பழம் சர்க்கரை பாங்காய் அமைத்து
சுரும்பும் விரும்பும் கனிவகை பிறவும்
இங்கிதப் பொங்கல் எங்கணும் பொலிக!
என்றே மங்கை மாரும் எழில்பெறு
சிறரும் சீர்வளர் உரையுடன் கூடி
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த
உலகியல் நாடி ஊழ்வினை துரந்து
வாழ்குவம் நாமும் வழிவழி யானே
அதான்று,
புலையுங் கொலையுங் கோதென நீத்து
சித்த சுத்தி வைத்திடு மனத்தராய்
குன்ரு வகையில் நன்ரு யாற்றி
தமிழ்வளம் பல்க! சுதந்திரம் வெல்க
என்றே வாழ்த்தி இன்புடன் வாழ்குவம்
தமிழுந் தமிழருந தழைத்துச் சிறக்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

எதிர்வரும் 14-1-64 செவ்வாய்க் கிழமை தைப்பொங்கற்திருநாளை முன்னிட்டு அன்றைய தினம் இந்துசாதன அலுவலகமும் சைவப்பிரகாசஅச்சகமும் திறக்கப்படமாட்டா. -அதிபர்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஷூ மார்கழிமீ உசூ௨ வெள்ளிக்கிழமை

## ஆட்சிபீடத்திலே தொடர்ந்து அமர நியாயமில்லையே!

மக்களை காக்க வந்த கட்சி தனது கடமையிலே தவறிவிட்டதென்பதை நான்கு ஆண்டுகளாக யாவரும் அறிந்துவிட்டனர் இருந்தும இவ்வாறு மதிப்பிழந்துவிட்டோமேஎன்று ஆட்சியாளர் எள்ளளவும் எண்ணுதிறுமாந்து நிற்கின்றனரே. ஆதிக்க ஆசையில் வைத்த பற்று அவ்வளவு கூடுதலாய் இருப்பதனாலேயே ஆட்சியாளர்கள் அரச பீடத்தை விட்டிறங்க முடியாமல் மக்களுக்கு மாற்றாராக மாறிவிட்டனர் உலகம் நகைத்தாலென்ன, ஊரவர்கள் பகைத்தாலென்ன, உரிய காலம வரைக்கும் அரசுநடத்தியே முடிப்போம் என்று முதல் அமைச்சரும ஏனையோரும் நாணமின்றி வீரம் பேசுகின்றார்களே!

உணவுக்கோ உடைக்கோ வாழக்கைக்குரிய வேறெதற்கோ பொருட்களின விலை நிலை கடந்துவிட்டது. அதனல் வாழ்கை என்பது பெரும்பாரமாகின்றது. ஆட்சி செயபவர்களுக்கும அப்பாலே நிலைமை சீர் கெட்டுப்போனது. எனவே மககள மனம் உடைந்து செய்வதென்னவென்றறியாது அலமந்து நிற்கின்றனர் ஆளுங்கட்சியிற் சில உறுப்பினர்கள் இந்த உணமையை மறைக்க முடியாமல உள்ளதை உள்ளபடி உரைத்துவிட்டனர். நிலைமையை மாறற முடியாவிட்டால் ஆட்சி பீடத்திலிருந்து விலகுவார்கள் என்பதே இப்பொழுது எங்கும நிலவும் கருத்து. மக்கள் கருததுக்குச் செவி சாய்க்காமல் எவ்வளவு காலத்துக்கு ஆட்சிபுரியமுடியும

நிக்கவே றற்றியாத் தொகுதியில் வாககாளர்களின் மனப்பான்மை எவ்வளவு தூரம் மாறியிருப்பதென்பதை ஆளுங் கட்சியினர் உணர்ந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தோம. ஆனால விழுந்தும மீசையிற் தூளி படவில்லையே என்று நியாயம பேசுகின்றார்கள் அமைச்சர்கள். 'ஆசைக்கோர் அளவில்லை' யென்பதுண்மை! அளவு கடந்தால் அமுதமும் நஞ்சாகும் என்பதுவும் உண்மையே.

# சைவப் பணியில்.................

1-ம் பக்கத் தொடர்ச்சி

நிறைவேற்றி முத்தி நெறியும் அடைந்தனர், எனவே சைவத்தின் வளர்ச்சியில் மகளிர் பங்கும் அதிக இடமபெற்றுள்ளது.

அடுத்து 'முருகன்பெருமை' என்ற பொருளில் திரு. த முத்துச்சாமிப் பிள்ளை அவர்கள் ஓர் சொற்பொழிவு ஆற்றினார்கள். அதுபோழ்து அவர் முருகனால் துன்பங்கள் நீங்கப்பெற்ற அக்கால மக்கள் சிலரைக் கூறி, திருமுருகாற்றுப்படை கந்தபுராணம் இவற்றின் சிறப்புக்களையும் ஆங்காங்கே எடுத்துக் கூறினார்கள்.

பின்னர் 'சக்தி வழிபாடு' என்னும் தலைப்பில் திரு. வ. குகசர்மா அவர்கள் ஓர் விரிவுரைநிகழ்த்தினார்கள், அருள் ஒளிவடிவமானது. அருளாகிய அன்னையுடன் போய்ச் சிவமாகிய தந்தையைக் காண வேண்டும். அருள் என்பது சிவனினின்றும் பிரியாதது. 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி பின்னமிலான்...' எனகின்றது திருவருட்பயன். அக்கினியின் சூட்டுக்கு ஒரு உருவம் கொடுத்தவாறுபோல் விளங்குவது அந்த அருள். நவராத்திரி சக்தி வழிபாட்டிற்குரிய காலமாகும். துர்க்கை, பவானி, இலக்குமி, சரஸ்வதி முதலிய தெய்வங்களை வணங்குகின்றோம். எல்லாம் ஒரே சக்திதான் எவ்வாறு மழை நீர் கீழே விழ்ந்தவுடன் கிணற்றுநீர், ஆற்றுநீர், குளத்துநீர், கடல் நீர், குண்டுநீர்முதலிய நீராகப் பெயர் பெறுகின்றதோ அதே போலத்தான இதுவும். சக்தி வழி காட்டவே நாம் இறைவனை அடைய வேணடும். சிவன் சக்தியுடன் கூடினால் உலகைப் படைக்கும் இயல்புடையராவார். அல்லாவிடில அசைவின்றி இருப்பார் என்கின்றார் ஆதிசங்கரர். சிவனையும் சக்தியையும் சேர்த்தே வழிபட வேணடும்; சக்தியை விட்டுச் சிவனைமட்டும் வழிபடக்கூடாது. இதற்கு ஓரே ஒரு முனிவர்மட்டுமதான் விதிவிலக்கு.

யாலையில் வித்துவான் க. வேந்தனார் அவர்கள் "சேக்கிழார்கண்ட திருநாவுக்கரசர் எனனும் தலைப்பில் ஓர் அரிய சிறப்புச்சொற்பொழவு நிகழ்த்தினார். எல்லாப் பெருங் காப்பியங்களும வடமொழித் தண்டியாசிரியரின் மரபின் படியே உள்ளன. ஆனால் பெரியபுராணமும், சிலப்பதிகாரமுமே இதற்கு விதிவிலக்கு சேக்கிழாருடைய து அருள்நெறிக் காவியம். சேக்கிழார் திருநாவுக்கரசரின் கோலத்தை, அவர் சமணர்களால் கடலில் விடப்பட்ட பின் மீணடும் திருவதிகை வீரட்டானம் வரும்பொழுது 'தூயவெண்ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ்வடமும் நாயகன் சேவடி தைவருசிந்தையும்..." என்று வரும் பாடலில் அழகுறப் புனைந்துளளார். தைவருதல் என்பது பழங்காலச் சொல் நீற்றறையில், 'மாசில் வீணையும' என்ற திருப்பதிகம் பாடல் 'வெய்ய நீற்றறை அது தான் வீங்கிள வேனிற் பருவம் தைவருதண்தென்றல்... ஐயர் திருவடி நீழல் அருளாகிக் குளிர்ந்ததே' நீற்றறையில் இருக்கும்பொழுதுதான் அவருக்கு இறைவன் திருவடிகள் தைவந்தது.

மேலும் "நனைந்தனைய திருவடி என் தலையேல் வைத்தாய்" என்பதில் நனைந்த திருவடி என்பதைச் சேக்கிழாரும் அப்படியே எடுத்து 'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தாரென்று, புனைந்த திருத்தாண்டகத்தால் போற்றல் செய்து...' என்றுபாடியுள்ளார். இங்கே நனைந்த திருவடி என்பது மலர்களினின்றும சொரியும் தேனால் நனைந்த திருவடி என்பதாம்

மேலும் திருநாவுக்கரசுநாயனாரும திருஞான சம்பந்த மூர்த்திநாயனாரும் சந்திக்கும் காட்சிகணகொளாக் காட்சி. இதைத் தெவிட்டாத தீந்தமிழில் சொல்லோவியமாகச் சேக்கிழார் வடித்துள்ளார். இவர் பூம்புகலூர் சென்று "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன், பூம்புகலூர் மேவியபுண்ணியனே" என்று பாடி இறைவனடி சேர்ந்தார்.

சைவசித்தாந்தப் பெருமைகள்

அடுத்ததாகச் "சைவ சித்தாந்தத்தின் மாண்பு" என்னும் தொடரில் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் சொற்பெருக்காற்றினார்கள். அப்பொழுது அவர் வேதாந்தம் என்று இப்பொழுது அழைக்கப்படும் ஏகான்ம வாதத்திற்கும், சைவ சித்தாந்தத்திறகும் உள்ள பேதங்களை விளக்கினார். பின்னர் அத்துவிதம்' என்ற சொல்லுக்குச் சைவ சித்தாந்தம் கொடுத்துள்ள பொருட்சிறப்பினை விளக்கினார். பல சைவ சித்தாந்த நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி, வேதாந்தத்தின் தெளிவே சைவசித்தாந்தம் என்பதை எடுத்துக் காட்டினார் தமிழிலுள்ள பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களும் சைவ சிததாந்த உண்மைகளை நாம் அறிந்து உணரும்படி தெளிவாகக் கூறியுள்ளமை பெரும் பாக்கியம் என்றும கூறினார்.

பின்னர் 'மெய்கண்டாரும் சிவஞான முனிவரும்' என்ற பொருளில் சித்தாந்த அறிஞர் வே. சோமசுந்தரம் அவர்கள் பேசும்பொழுது கடவுளைக் கோயில்களிலும் சிவனடியாரிடத்திலும், குருவினிடத்தும் நம மனதிலும காணலாம். உலகம், உயிர் கடவுள் ஆகிய முப் பொருள்களும் அநாதி. சைவம என்பது சிவத்தொடு சமபந்தப்படுத்துதல் என்பதும் ஒரு பொருள். அல்லது சிவானந்தம் என்றும் கொள்ளலாம். இரு முனிவர்களும் எவ்வாறு சித்தாந்த நூல்களை ஆக்க வழிகாட்டியாக விளங்கினர் என்றும் குறிப்பிட்டார்.

குரு லிங்க சங்கமம்

... 'குரு லிங்க சங்கமம்' என்னும் தலைப்பில் திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள் பேசினார்கள். சைவக் குருமாரைச் சைவ மக்கள் மதிக்கின்றார்கள் இல்லை. ஆனல் மற்றைச் சமயத்தவர் எவ்வாறு தம் குருமாரைப் போற்றிப் பேணுகின்றனர். நாவலர் ஒரு கிராமம் வாங்கி அங்கு ஓர் மடமும் கல்லூரியும் ஸ்தாபித்து, சமயமும், உலகக் கல்வியும் பயிற்றுவித்துப் பின் அவர்களைச் சமயப் பிரசாரகர்களாகவும், சைவக் குருமார்களாகவும உருவாக்க, இற்றைக்கு 103 வருடங்களுக்கு முன் திட்டமிட்டார் அது இன்றுவரை நிறைவேறவே இல்லை.

குரு, இலிங்கம், சங்கமம் ஆகிய மூன்றும் இறைவன் உறையும் திருமேனிகள். குரு - உருவத் திருமேனி; இலிங்கம - அருவுருவத் திருமேனி; சங்கமம - அருவத் திருமேனி. இலிங்கத்தைப் பற்றிவேதத்திலும், நீலகண்ட சாஸ்திரியாராலும், வேறு வேறான தவறான அபிப்பிராயங்கள் உள்ளன. இதைப் படித்த மேலைத்தேசத்தவரும தவறான கருத்தையே கொண்டிருக்கின்றனர் தாபக இலிங்கம் கோயில்களில் உள்ளது சூக்கும இலிங்கம அடியார் நெஞ்சில் உள்ளது

தலைவரவர்கள் குறிப்புரையின்போது மெய்கண்டதேவர் பரம்பரையின் தோற்றம், அத்வைத பயக்கம் ஏற்பட்டதால் உண்டானது என்றார் ஈற்றில் சமயப்பிரசார அமைச்சருக்குச் "சைவ மெய்த்தொண்டன்" என்னும் நாமம் நிலவும்படி வாழ்த்தி அருளினார்

சர்மானியர் போற்றுவது

மூன்றாவது நாள் மகாநாடு திரு. வே நாகலிங்கம் அவர்கள் தலைமையில் கூடியது. தலைமையுரையில் திருவாசகத்தைப்பற்றிப் பேசினார். டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் சுவை குன்றாமல் திருவாசகத்தையும் திருக்குறளையும ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். திருவாசகம் ஆங்கிலேயராலும் புகழப்பட்டுள்ளது. ஒரு ஜெர்மனியரும் திருவாசகத்தைப் புகழ்ந்துள்ளார். அது இன்னமும் மொழிபெயர்க்கப்படாமல் சென்னைச் சர்வகலாசாலையில் இருக்கின்றது. சிவப்பிரகாச சுவாமிகள் வேதத்தையும் திருவாசகத்தையும் ஒப்பிட்டுள்ளார் இராமலிங்கசுவாமிகளும் "வானகலந்த மாணிக்கு வாசக! நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து, பால்கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று புகழ்ந்துள்ளார். திருவாசகத்துக்குருகார் ஒருவாச

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# ஸ்ரீ சிவகுருநாதர் நினைவுநாள்



ஸ்ரீ சிவகுருநாதர் நினைவு நாள் நிகழும் சோபகிருது ஷூ மார்கழிமீ (11-1-64) சனிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரால் சபை நாவலர் ஆச்சிரமத்தில் கொண்டாடப்படும்.

நிகழ்ச்சிகள்:

முற்பகல் 9 மணி — பிற்பகல் 1 மணி.

சிவபூஜாமண்டபத்தில் சிவப்பிராமணர் சிவபூசை, நாவலர் மண்டபத்தில் கடவுளாராதனை, ஆசீர்வாதம், சமாராதனை

இரவு 6½ மணி — 8. தமிழ் இசை விருந்து.

அன்பர்களைச் சமுகமளித்து நிகழ்ச்சிகளிற் பங்குபற்றும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

சைவ பரிபாலன சபை.
யாழ்ப்பாணம், 7-1-64.

## கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் மகா மண்டபம்

கடந்த பிலவ வருடம் ஆவணி மாதம் வண்ணைக் கொடைவள்ளல்' ஐக்கிய லாபநிதி சிறுப்பர் சு. கனகசபை அவர்களின் தலைமையில் அடிக்கல் நாட்டப்பெற்று அன்னாரின் பெரும்பணவுதவியுடனும் இன்னும் பலரின் நன்கொடையினலும் நிர்மாணிக்கப்பெற்று முக்காற் திட்டம் வரை நிறைவேறி வந்துள்ள மேற்படி காயில் மகாமண்டபம் தைமாதத்தில் திறப்பு விழா நடைபெறவிருக்கிறது என்று அறியப்படுகிறது.

## 'சித்தாந்தச் செம்மல்'

ஏழாலையில் நடைபெற்ற 'இலங்கையர் கோன்' நினைவுவிழாவின்போது, திரு. மு. ஞானப்பிரகாசம் B.sc. அவர்களுக்கு "சித்தாந்தச் சேம்மல் என்னும் பட்டத்தை 'ஆத்மசோதி' ஆசிரியர் திரு. நா முத்தையா அவர்கள் வழங்கிக்கௌரவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவப் பணியில்......

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கத்திற்கும் உருகார் என்பது முதுமொழி. திருச்சிற்றம்பலக்கோவையார், எவர் எம் மனத்துடன் படிக்கின்றார்களோ அவர்களுக்கு அம்முறையே தோன்றும் தன்மையது என்றார்.

சுந்தரர் செந்தமிழ்

அடுத்துச் "சுந்தரர் செந்தமிழ்" என்னும் தலைப்பில் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பேசுகையில் சுந்தரருக்கும் இறைவனுக்கும் உள்ள நட்புரிமையை விளக்கி, எவ்வாறு சுந்தரர் தன் தேவைகளை எல்லாம் இறைவனிடம் நண்பர்களிடம் வேண்டுவது போல் வேண்டிப் பெற்றார் என்று காண்பித்தார், "தீது அகன்று உலகம் உய்யத் திருவவதாரஞ் செய்தார்" சுந்தரர் என்கின்றார் சேக்கிழார். நாயன்மார்கள் சைவத்தை மாத்திரம் வளர்க்கவில்லை, தமிழையும் வளர்த்தார்கள் "நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர்" என்று சம்பந்தர் அழைக்கப்பட்டார். இறைவன் சுந்தரரை நோக்கிச் "சொற்றமிழ் பாடு" என்றார் அருணகிரிநாதர் சுந்தரரைக் "கற்ற தமிழ்ப்புலவன்" என்கின்றார். சிவபூசை முடிந்ததும் சேரமான் பெருமான் நாயனாருக்குக் கேட்கும் சிலம்பொலி ஒருநாள் சற்றுத்தாமதமாகவே கேட்டது, அதற்குக்காரணம் அவர் சுந்தரரின் செந்தமிழைக் கேட்டுக்கொண்டு இருந்தபடியால்தான். இப்படியாகவே சுந்தரர் பெருமை அளப்பரியது எனக் குறிப்பிட்டார்.

(தொடரும்)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 3668
மண்கும்பான் சிவசங்கரர் தம்பையா -வழக்காளி
எதிராக
அல்லைப்பிட்டி நீக்கிலாப்பிள்ளை ஞானப்பிரகாசம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3668ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை 1964ம் ௵ மாசி மீ 8ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 642-50ம் 1-10-60 தொடக்கம் 28-3-62 வரைக்கும் ரூபா 500க்கு 12 வித வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 170-10 ஏற்பட்ட செலவு ரூபா 23-35 வெலியாத்துச்செலவுரூபா 17-35 ஏற்படக்கூடிய செலவு.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று, அல்லைப்பிட்டி இறை "கற்குளம்" நிலபர இலா. 3, கிணறும், எல்லை கிழக்கு இளையதம்பி சங்கரப்பிள்ளையினதும் மறுபேரினதும் ஆதனங்கள், வடக்கு சந்தியோமதரேசுவினதும் பங்காளரினது ஆதனம், மேற்கு சிதம்பரநாதர் கந்தையவினதும் சவிரிமுத்து பெண் எலிசபேத்தினதும் ஆதனங்கள், தெற்கு செபஸ்தியாப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளையினுதனம். இதடங்கலும் மேற்கெல்லைக் காணிக்கு மேற்குப்பக்கமாகவுள்ள ஒழுங்கையிலிருந்து இக காணிக்குப் போககுவரவு செய்யும் பாதைப் பாவிப்புரித்தும், பதிவு இலக்கம் C 284/8.

அ வெற்றிவேலு,
கொமிஷனர்.
19. வேம்படி வீதி
யாழ்ப்பாணம், 26-10-63.

## சூரியனே வருக!

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : பூபாளம் :: தாளம் : ரூபகம்

பல்லவி

சுகமும் பொருளும் சுரந்தருள் தரும்
சூரியனே வருவாய் — சிவ (சு)

அநுபல்லவி

சகல கலையின் மழை பொழிந்து
மகர மதியில் மகிழ்ந் தெழுந்து (சு)

சரணம்

அந்தணரும் மறையும் வாழ
ஆவும் அன்பும் கோவும் வாழ
செந்தமிழும் சிவமும் வாழ
தேசம் பொங்கிச் செழித்து வாழ. (சு)

# மார்கழி 29 அன்று அன்னக்கொடி

——0——

## சித்தாந்த நூல்கள் இலவசவெளியீடு

——0——

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

சிதம்பரம், மார்கழி 18

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் என்னும் செந்தமிழ்ச் சிவஞானப்பண்ணையில், ஆதீனத்தின ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகளின் குருபூசை மகோற்சவம் மார்கழி 29ந்தேதி தொடங்குகிறது. 21-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அன்று காலை அன்னக்கொடியை ஏற்றிவைப்பார்கள்.

ஸ்ரீலஸ்ரீ. நமசிவாய மூர்த்திகளின் வலதுபக்கத்திலிருக்கின்ற பெரியகட்டு அன்னக்களஞ்சியம். இங்கேதான் தினமும் ஏறுபடி காலங்களிலும் மாகேசுர பூசை நடைபெறும். தினந்தோறும் இங்கு ஆயிரத்துக்குக் குறையாமல் மக்கள் அன்னம் அருந்துவார்கள். இதில் சித்திராசனமுப் இருபக்கங்களிலும் தத்துவிளக்கு மேடைகளும் விளங்கும் மேடையில் ஸ்ரீலஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்கள் வீற்றிருக்க நாற்புறமும் சிவவேடப்பொலிவோடு முனிவர்களும் மற்றவர்களும் "அர கர" முழக்கத்தோடு அமுது அருந்துவது ஒரு தெய்வக்காட்சியாகவே திகழும். 300 ஆண்டுகளுக்கு முன்பு 12 ஆண்டுகளாக நாள் பார்த்து நல் முகூர்த்தத்தில் அடுப்பில் மூட்டிய தீ இன்று வரை 300 ஆண்டுகளாக அணையாமலே இருந்து வருகின்றது.

11-வது திருமந்திர மகாநாடு ஜனவரிமாதம் 13, 14, 15 மூன்று தேதிகளிலும் ஆதீன கொலு மண்டபத்தில் நடைபெற்றுவரும்.

21-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ, சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் (இப்பொழுது ஞானச்செங்கோலாட்சியில் உள்ளவர்கள்) நாடெங்கிலும் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் வளர்ச்சிபெற வேண்டி சுமார் 2 லட்சம் ரூபாய் மதிப்பில் ஆதீனத்திலேயே ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகளின் நினைவில் ஓர் அச்சு யந்திர சாலையை அமைத்து ஆண்டு ஒன்றுக்கு சுமார் 75 ஆயிரம் ரூபாய்க்கு சித்தாந்த சாஸ்திர நூல்களை உயர்ந்த முறையில் எளிய நடையில் அச்சிட்டு மக்களுக்கு அவ்வப்போது அன்பளிப்பாகவே வழங்கிக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

——0——

புத்தூர் மேற்கு
கந்தையா சதாசிவம் —வழக்காளி
இல. M, B. 4223
எதிராக
ஆவரங்கால்
எஸ். வேலாயுதபிள்ளை கைம்பெண் நல்லபிள்ளை எதிராளியாகவும் காலஞ்சென்ற எஸ். வேலாயுதபிள்ளையின் பிரதி காரியஸ்தராகவும் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4223-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகள் 1964-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 1-ம் திகதி (1-2-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2700-ம், இதில் ரூபாய் 2000-க்கு 31-8-61 திகதி தொடக்கம் 30-11-61 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 264-50 சதம். இதில் ரூபா 1900 இறுபட்டது

காணிகளின் விபரம்.

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க் கோவிற்பற்று ஆவரங்காலிறை "தாண்டவன் வடலியும், செக்கனன் திட்டியும்" நிலப்பரப்பு (2-ம்), கிணற்றில் தண்ணீர்ப்பங்கும். எல்லை கிழக்கு மயிலு காசியருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு கணபதிப்பிள்ளை சிவகுருவுக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம், மேற்கு குறித்த எதிராளிக்கும் சின்னத்தம்பி பெண் ஆச்சிமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு நாகலிங்கம் பெண் சின்னாச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதல் சொரியலாய் மூன்றில் ஒரு பங்கு (1/3).
முற்பதிவு K. 84/235.

2. மேற்படி ஆவரங்காலிறை "தாண்டவன்வடலி" நிலப்பரப்பு இரண்டு (2-ம்) குளி ¾-ம், இரு தென்னைகளும், மேற்கெல்லைக காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் இறைக்கும் மிசின் பம்பில் பங்கும் வழிவாய்க்காலும். எல்லை கிழக்கு மயிலன் காசிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு குறித்த எதிராளியின் ஆதனம், மேற்கு கனகசபாபதி பெண் இளையபிள்ளையின் ஆதனம். தெற்கு கார்த்திகேசு பெண் பொன்னம்மாவின் ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner & Valuer,
Licensed Auctioneer.
தெல்லிப்பழை. 2-12-1963.
M. 260 10-1-64.

இவ்வாரம் 12-1-64 — 18-1-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தொழில் நன்மையும், விவசாய இலாபமும், நண்பரால் கெடுதியும், கவலையும் உண்டாம். முதல் நாளைக் கவனமாகச் செலவிடுக.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

ஞாயிறு மாலை திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழிய வேண்டும், தந்தைவழி உறவினரின் பகைப்பும், வசைபரப்புவோர் தொல்லையும், பணநன்மையும் உண்டாம்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

முதல்மூன்று நாட்களும் புதுமுயற்சியில்நன்மையும், புதனும் வியாழன் காலையும் தொல்லையும், தொழிலால் நன்மையும் உண்டாம்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

குடும்பத்தில் குழப்பமும் புயல்களும் சுகவீனமும் பணநன்மையும் உண்டு வெள்ளி மாலை சனி எச்சரிக்கை!

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

எதிர்ப்புக்கரைந்துவிடும். தடைகளைத் தாண்டி வெற்றிபெற உம்மால் முடியும். குடும்பத் தகராறுகளுக்கு இடமுண்டு.

கன்னிராசி உத்தரம் 2, 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உடல்நிலை ஊறுபடும். வயிற்றுக்கோளாறுகளுக்குஇடமுண்டு. எதிர்பாலைச் சேர்ந்த நண்பர்கள் தொல்லையுண்டு. தொழிலளவில் நல்லவாரம்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன் மோதலும் வாகனதிகளால் செலவும், சிறு விபத்துக்களும், எண்ணங்களுக்குத் தடையும் உண்டாம்.

விருச்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம். கேட்டை.

பணவளவில் நல்லவாரம், நிலபுலங்களால் இலாபமும் நண்பரின் உதவியும் சிறுசுகவீனங்களும் உண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இனத்தவருடன்மோதலும்கண்ணோயும், இளையோரின் உதவிப்பேறும் தொழிலளவில் ஓரளவு நன்மையும் உண்டாம்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

விவகாரங்கள் குழப்பலாகஇருக்கும். நிம்மதியில்லை நண்பர்கள் உம்மைக் காட்டிக் கொடுப்பர். பணமளவில் ஓரளவுநல்ல வாரம்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணநன்மை, நிம்மதியீனம், அலுவலகச் சச்சரவு ஆகியன உண்டு.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பணநன்மை, பழைய முதலீட்டில் வருவாய், இனத்தவருடன் மோதல் உண்டாம், வசைபரப்புவோர்பற்றி எச்சரிக்கை.

### கோட்டுவிற்பனவு விளம்பரம்

மீசாலை வடக்கு
தம்பு தம்பிஐயா —வழக்காளி
இல, 2576
எதிராக
தாவளை இயற்றாலை
கதிரித்தம்பி கந்தர் —எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2576-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1964-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 18-ம் திகதி (18-1-64) சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தல் விற்கப்படும்,

தீர்வைத்தொகை;-முதல்வட்டி ரூபாய் 482-50-ம், இதில் ரூபாய் 250-க்கு 26-12-62 திகதி தொடக்கம் 13-5-63 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 148-10 சதம்.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணிக்கோவிற்பற்று தாவளையற்றாலையிறை "கேசறபிட்டி வயல்" நெற்பரப்பு (90) இதல் கேசறபிட்டியிற் பிள்ளையார் கோவிலுக்கும் அம்மாள் கோவிலுக்கும் கிழக்கே நெ. பர (17-ம்) எல்லை கிழக்கு சண்முகநாதர் பெண் கண்ணரத்தினத்திற்கும் சகோதரர்க்குமுரிய ஆதனம், வடக்கு வகிதேவர் பெண் பாறுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு மேலே குறிக்கப்பட்டிருக்கும் கோவில் ஆதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

முற்பதிவு F 286/41.

2. மேற்படி தாவளை இயற்றாலையிறை 'கேசறபிட்டி வயல்" நெற்பரப்பு (90) இதல் குறித்த கோவிலுக்கு மேற்கே நெற்பரப்பு (60) எல்லை கிழக்கு குறித்த கோவில் இருக்கும் ஆதனம், வடக்கு பொன்னர் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு முருகர் மூத்ததம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு நடராசா பெண் தெய்வானையின் ஆதனம். இதில் சொரியலாய் ஐந்தில் இரண்டு பங்கு (2/5) முற்பதிவு F 286/242.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 13-12-1963,
M 259 10-1-64.

## இலங்கையர்கோன் நினைவு

ஈழத்தின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவரெனத் தமிழகமும் ஈழமும் ஏற்றிப் போற்றி வரும் மறைந்த சிறுகதை எழுத்தாளர் இலங்கையர்கோன் 2-வது நினைவுவிழா சென்ற 4-1-64 சனிக்கிழமை மாலை அவர் பிறந்த இடமாகிய ஏழாலையில் கொண்டாடப்பட்டது. விழா அமைப்பாளராக திரு தா. சண்முகநாதன் கடமையாற்றினார். விழாவில் திரு. நாவேந்தன, இந்துசாதனம் ஆசிரியர் நம. சிவப்பிரகாசம், கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி, ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா திரு. இராஜ அரியரத்தினம் உட்படப் பலர் பங்குபற்றினர். இறுதியில் இடம்பெற்ற கவிதை அரங்கிற்கு கவிஞர் அம்பி அவர்கள் தலைமை தாங்கி நடத்தினர். கவிஞர்கள் சு துரைசிங்கம், வே. சண்முகலிங்கம, சுப்பிரமணியம், உமா மகேஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
தத்துவ வழ. இல. 969
யாழ்ப்பாணம்,
விக்டோரியா றோட்
M. சதாசிவம் தியாகராசாவின் காலஞ்சென்ற மனைவி லோகேஸ்வரியின் மரணசாஸனம் எழுதி வைக்காத சொத்தின் விசயமாக.
—இறந்தவர்.

யாழ்ப்பாணம்,
விக்டோரியா றோட்
M. சதாசிவம் தியாகராசா
—இறந்தவர் சொத்தை நிர்வகிப்பவர்.

இவ்வழக்கில் எனக்குக்கிடைத்த உத்தரவின்படி கீழ்காணும் நகைகள் 1964-ம் ஹு பெப்ரவரி மீ 10உ (10-2-64) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 19-8-63 திகதியின் கோட்டு உத்தரவுக்கிணங்கக் கோட்டுச் சக இடுத்தார் அவர்களின் சமூகத்தில் மேற்படி கோட்டின் முற்றத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நகைகளின் விபரம்:

| | நிறை பவு. மஞ் |
|---|---|
| 1. பெண்டன், (இருதயககல்லுடன்) | 2 —2½ |
| 2. ஒரு பவுண் சங்கிலி | 2 —½ |
| 3. பதக்கம் | 3¼—— |
| 4. ஒரு நெக்கிலஸ் | 2¾-2 |
| 5. ஒரு றேடியோகாப்பு | 1 —— |
| 6. ஒரு சோடி காப்பு | 1½— |
| 7. ஒரு பவுண் காப்பு | 1¼—— |
| 8. கல்வைத்த ஒரு பவுண் மோதிரம் | ½ —— |
| 9. ஒரு பழைய மோதிரம் | ½ —— |
| 10, ஒரு சோடி காதோலை | ¼ —— |
| 11, 9 கற்களுடன், ஒரு சோடி காதோலை | ¼ —— |
| 12. ஒரு மின்னி | —-— |

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
Licensed Auctioneer & Valuer
643 காங்கேசன் துறைவீதி.
யாழ்ப்பாணம். 7-1-64.
M 256 10-1-64,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
1. ஊர்காவற்றுறை கிழக்கு மரியாம்பிள்ளை தொம்மைகுட்டி —வழக்காளி
இல. M.B. 4813
எதிராக
1. கரம்பன் கிழக்கு சவரிமுத்து இம்மானுவேல் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 4813-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1964ஹு தைமீ 25-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1580-ம் இன்னும் 14-5-62 தொடக்கம் 20-1-63 வரைக்கும் 12%வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 199-12½ சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பன் "காணி குடி இருப்பு" பர. நில. இலா, 4 குளி 5, ஒருபனைமரமும் ஒரு தென்னைமரமுடன், எல்லை கிழக்கு இயக்கப்பிள்ளை சவரிமுத்துவும்பெண் சவரியாச்சியினுதனம், வடக்கு ஃபேடினன்ஸ் பெண் இஸபல்பிள்ளைக்கும் மற்றவர்கட்குமுரியவாதனம், மேற்கு அந்தோனிப்பிள்ளை பெண் கிளமெந்துவினுதனம், தெற்கு தம்பிஐயா பெண் திறஸம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். இதடங்கலும் மேற்கும் வடக்கும் எல்லை கிழக்கிலிருக்கும் கிணறுகளும், அககிணறுகளுக்குச் செல்லும் வழி வாய்க்காலுரித்தும், கிழக்கெல்லையில் கிழக்குப்பக்கமாக இருக்கும் காணிக்கு தெற்கெல்லையிலிருக்கும் நாலுமுழ நடைபாதையில் போக்குவரத்துரித்தும், ஆனல் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும், கிழக்கும் மேற்கெல்லையிலிருக்கும் காணிகளுக்குச் செல்லும் வழிவாய்க்காலுரித்து புறநீங்கலாக. C 299/95 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது,

செ. விசாகரெத்தினம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
No 133 பருத்தித்துறை றோட்டு
நல்லூர்,யாழ்ப்பாணம் 23-12-63
M. 257 10-1-4

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 503.
யாழ்ப்பாணம்
டிஸ்றிககோட்டில்
உரும்பிராய்கிழக்குயாழ்ப்பாணம்
1. வல்லிபுரம் அப்பாத்துரையும்
2. பெண் தங்கரத்தினம்
-வழக்காளிகள்.
எதிராக
கொக்குவில்கிழக்குயாழ்ப்பாணம்
1. கணபதிப்பிள்ளை செல்லையாவும்
2. பெண் நல்லம்மா
-எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 503 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுககட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக் காணியை 1964 ம் ஆண்டு பங்குனி மாதம் 5 ம் திகதி (5-3-64) வியாழககிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2996. சதம் 71. இன்னும் ரூபா 2000 த்திற்கு 13-9-55 தொடக்கம் 9-11-55 வரைக்கும் 100 க்கு 7 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 201 சதம் 75. இதில் ரூபா 1000 கொடுபட்டது. ஏற்குமியல்பாய் ரூபா 27 முத்திரை கொமிஷனில் ஒட்டப்பட்ட.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் நல்லூர்கோயிற்பற்று கொககுவில இறை 'கினைத்தக முடிததான்' பர நில இலா 3½ வீடும் பனைகளும், வான் பயிர் செய்பயிர்களும. கிழக்கே கையொழுங்கையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் தண்ணீர் பாவிப்புருத்தும் வழககம் போல் வடககெல்லை ஒழுங்கைக் கூடாக றோட்டுக்குப் போகும் வழிப்பாதை உரித்தும். எல்லை கிழக்கு ஆறுமுகம் வயித்திலிங்கத்தினுதனம் வடக்கு செல்லையாவினுதனம். மேற்கு ஆறுமுகம் தம்பையாவுக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு சோதி இராசசிங்க பெண் செல்லம்மாவினுதனம்

தா, செல்லையா,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
இல: 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிககுளி, யாழ்ப்பாணம்
30-12-63.
M. 249 10-1-64


யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M.B, 5408
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
தையிட்டி, காங்கேசன்துறை
1. சின்னையா சிவக்கொழுந்து
2. பெண் இராசம்மா
—வழக்காளி
எதிராக
வசாவிளான்
வல்லிபுரம் சரவணமுத்து
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 5408 இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1964-ம் ஆண்டு மாசிமாதம் 22-ம் திகதி (22-2-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1400/- இன்னும் ரூபா 1200-க்கு 13-2-63 தொடக்க 17-6-63 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத தொகைக்கு றுபடுயவரைககும 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 180/- சதம் 45,

காணிகள் விபரம்:

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடககு மயிலிட்டி கோவிற்பற்று, பலாலி இறை "மூலாச்சை" பர நில. இலா. 13½ பனைகளும் எல்லை கிழககு ஒழுங்கை வடககு மூத்த தம்பி நடராசாவுக்கும் பிலிப்புப்பிள்ளை கைம்பெண் திரேசப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருககுமுரிய ஆதனம், மேற்கு வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தினுதனம், தெற்கு ஒழுங்கை சொல்லப்பட்ட ஆதனத்தில் சொரியலாய் 1/6 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

2. ஷை வசாவிளான் இறை 'வீரவததை' பர. நில. இலா. 5 குளி 6-ம், கல்வீடும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை சரவணமுத்துவினுதனம், மேற்கு கதிரிப்பிள்ளை மகள் வள்ளியம்மைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடககு ஐயம்பிள்ளை கைம்பெண் பொன்னுவின் உரிமைக்காரருககும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை. இதில் சொரியலாய் ¼ பங்கும் மேற்குப்பக்கத்திலுள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்கும். ஆனல் கிழக்குப்பக்கததிலுள்ள கல்வீடு இந்தப்பங்குககுரியது

3. ஷை மயிலிட்டி இறை 'கல்வியலிட்டி" பர. நில இலா 17¼. இதில் தெற்குப்பாகமாகப் பிரிக்கப்பட்ட பர. நில. இல. 8 5/8 எல்லை கிழக்கு காசிநாதர் ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு நமசிவாயம் பெண் ஆச்சிப்பிள்ளையினுதனம், மேற்கு காசிநாதர் ஆறுமுகத்தினுதனம், தெற்கு கதரன் பெரியானின் உரிமைக்காரரினுதனம். இதில் சொரியலாய் ½ வாசிப்பங்கும் அதைச்சேர்ந்தவைகளும்.

தா செல்லையா,
கொமிஷனருமவிலைமதிப்பாளரும்
நம்: 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
30-12-63.
M. 250 10-1-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
வழ. இல. M B 4832
கோண்டாவில் (தற்போது மலேயாவிலிருக்கும்)
1. செல்லப்பா முத்துத்தம்பியும் மனைவி 2. யோகேஸ்வரியும் இவர்களின் சட்டபூர்வமான பிரதிநிதியான கோண்டாவில் சபாபதி சுப்பிரமணியம் கைம்பெண் அன்னமமா
வழக்காளிகள்
எதிராக
கொக்குவில் கிழககு
செல்லப்பா செல்லையா
எதிராளி.

இவ்வழக்கில் எனககுக கிடைத்த உத்தரவின்படி கீழ்ககாணும் ஆதனம் 1964ம் ஹு பெப்ரவரிமீ 8 உ (8-2-64) சனிககிழமை முற்பகல் பத்துமணி தொடககம் அந்தககாணிககுள்நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத தொகை:- முதல் வட்டி ரூபா 2732-50 சதமும் மேலும் ரூபா 2000ககும் 22-5-62 திகதி தொடககம் 1-11-62 திகத வரைக்கும் வருடமொன்றுககு 9 வீதவட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுககும் வரைககும் வருடமொன்றுககு 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 100ம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்ககோயிற்பற்று கொககுவில் கிழக்கிறை "புளியன்கன்றடி வளவு" நிலப்பரப்பு3 குளிகள் 4⅛. இதல் மேற்குப்பாகமாக நிலப்பரப்பு 1, குளிகள 11 1/16, கல வீடும், செய்பயிர் வான்பயிர் களும். இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை மனைவி செல்லததனுதனம், வடககும் மேற்கும கை ஒழுங்கைகள், தெற்கு காசிநாதன மனைவி அன்னப்பிள்ளையினுதனம்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனச்,
ஏல விற்பனவாளர்,
643. காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம். 14-12-63.
M 254 10-1-64

## கிரான் சித்தி விநயகர் ஆலயம்

கிழக்கு மாகாணம் கிரான் ஸ்ரீ சித்திவிநயகர் ஆலயத்தில் திருவெம்பாவைப் பூசைகள் மிகவும் சிறப்பாக நடந்தேறியன.

திருவாதிரையில் அன்று சுவாமிக்கு விசேஷ அபிடேக ஆராதனைகள் பூசைகளை சமயக்கிரியை விதிக்கமைய பிரம. ஸ்ரீ. கு பரமசாமிக் குருக்கள் நடத்தி வைத்தார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M,B. 1674
சுப்பிரமணியம் பொன்னம்பலம்
காரைநகர் மேற்கு
—வழக்காளி.
எதிராக
1. முகம்மது அப்துல்காதரும் மனைவி
2, செயினுமுகம்மது நாச்சியா வண்ணர்பண்ணை மெற்கு
—எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு M.B, 1674-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1964-ம் ஆண்டு மாசி மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கபபடும்.

தீர்வைத தொகை:- ரூபா 17,175-ம். 5-6-57 தொடக்கம் 17-6-58 வரையில் ரூபா 15,000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றுக இறுபடும வரையில் முழுககூட்டுத் தொகைக்கு 17-6-58 தொடக்கம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 273-20 ம். இதில் ரூபா 8000 முதலாலும், ரூபா 200செலவாலும் ஏற்கவே கொடுபட்டது.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணர்பண்ணை கோவில்பற்று, வண்ணர்பண்ணை இறை "ஆனை விழுந்தான்" இக்காணி 1945-ம்ஆண்டு கார்த்திகை மாதம் 5-ம் திகதி G. மனுவேல் காணி அளவைககாரனுல் தயாரிக்கப்பட்ட 282-ம் இலககம் கொண்ட படத்தின்படி பர. நில. இலா. 2, குளி 9.9. உறுதியின்படி பர. நில. இலா. 2, குளி 1, 11/16. இதில் 5057-ம் இலக்கம் கொண்ட பிரிவிடுதல் உறுதியுடன் அணைக்கப்பட்ட மேலே சொல்லிய படத்தின்படி 2-ம் துண்டு பரப்பு நிலலாச்சம்1, குளி 5,6-ம் வீடும் கிணறும் மலசலகூடமும், தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசியும் அதைச்சேர்ந்தவைகளும்.

2. இந்த 2-ம் துண்டு பர. நிலாச்சம் 1. குளி 5.6-க்கு எல்லை கிழக்கு றோட்டு வடக்கு முகமது மொகிடீன் சாகுல்கமதின் மனைவி சித்திசகீனுவின் ஆதனம், மேற்கு எம். முகம்மது மீரும்பிள்ளையின் ஆதனம், தெற்கு மதாரசாகிப் கவேமா லெவ்வை மரக்காயரின் ஆதனம்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 6-1-64.
M 255 10-1-64

## சீரணி நாகம்மாள் ஆலயத்தில் பஜனை

3-1-64 வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் கட்டுடை சீரணி நாகம்மாள் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை மாலைதோறும் நடைபெறவிருக்கும் பஜனையை அதன் தலைவர் திரு இ. கந்தசுவாமி ஆரம்பித்து வைத்தார்.

இலவச சமய தீட்சையும் அங்கு தைமாதத்தில் அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்கத்தால் நிறைவேற்ற ஏற்பாடாகியுள்ளது.


உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற
பவுண், வைர ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்:
எல். கே. எஸ்.
"தங்க மாளிகை"
கன்னதிட்டி, :: யாழ்ப்பாணம்
போன்: 281. தந்தி: ஜுவல்லாஸ்.



யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலககத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் ... அச்சிட்டு வெளியிடப்பெற்றது
... சிவப்பிரகாசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org